**ஸ்லின்டெக் அகடெமியின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை - 2023 /2024**

---

ஸ்லின்டெக் அகடெமியின் 2023 மற்றும் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதுகின்ற எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காணித்துக் கொள்ளல் வேண்டும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான வழிகாட்டிக் கையேட்டின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2022/2023 மற்றும் 2023/2024 ஆம் ஆண்டுகளின் கட்டுப்பாட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினம்**

கம்பனியால் இறுதியாக தயாரிக்கப்பட்ட 2022 மார்ச் 31 ஆந் திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புகள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| நிதிக்கூற்றுக்களின் உருப்படி | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| **சொத்துக்கள்** | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 1,893,829 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 2,745,422 |
| **மொத்த சொத்துக்கள்** | -------------- |
| | **4,639,251** |
| | ======= |

| | |
|---|---|
| **மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | |
| மூலதனம் | (8,642,380) |
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 12,238,255 |
| நடைமுறை பொறுப்புகள் | 1,043,376 |
| **மொத்த பொறுப்புகள் மற்றும் மூலதனம்** | ----------------- |
| | **4,639,251** |
| | ======== |

| | |
|---|---|
| மொத்த வருமானம் | 57,170 |
| மொத்த செலவினம் | 385,028 |
| **பற்றாக்குறை** | ------------ |
| | **(327,858)** |
| | ======== |

### 2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஸ்லின்டெக் அக்கடமியின் 2020 ஆம் ஆண்டின் போது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து ரூபா 10,500,000 ஆன கடன் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2024 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அந்த கடன் மீள செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கடனை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3. ஏனைய அவதானிப்புகள்

### 3.1 நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அக்கடமிக்கு சொந்தமான ரூபா 774,490 கூட்டுத்தொகையான 02 மடி கணினிகள், 07 கதிரைகள், 01 கோவை அலுமாரி மற்றும் புகைப்படப் பிரதி இயந்திரமொன்று இலங்கை | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அக்கடமிக்கு சொந்தமான சொத்துக்களை முறையாக அதிகாரமற்ற முறையில் வெளிவாரித் |

| | | | |
|---|---|---|---|
| | நெனோ தொழில்நுட்ப நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்டவாறு நிலவியது. | | தரப்பினருக்கு வழங்க கூடாது. |
| (ஆ) | 2024 சனவரி 18 ஆந் திகதி கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது அக்கடமியின் 25 மடி கணினிகளில் 19 மடி கணினிகள் மற்றும் 2 கணினிகள் இலங்கை நெனோ தொழில்நுட்ப நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 03 கணினிகள் மாணவர்களால் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.<br>அக்கடமியின் பொறுப்பில் 30 வாசிகசாலைப் புத்தகங்கள் காணப்பட்ட போதிலும், பௌதீகப் பரிசோதனையின் போது 15 புத்தகங்கள் மாத்திரம் காணப்பட்டன. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களின் நிலவுகை மற்றும் பயன்பாடு உரிய முறையில் முகாமை செய்யப்பட வேண்டும். |
| (இ) | அக்கடமியினால் பேணிச் செல்லப்படும் பதிவேடுகளின் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டுள்ள போதிலும், இதுவரையிலும் பயன்படுத்தப்படும் ரூபா 1,826,963 பெறுமதியான சொத்துக்களின் பயன்படு ஆயட்காலம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தப்படும் சொத்துக்களின் பெறுமதி உரிய முறையில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | அமைப்பு அகவிதியின் 5(1) ஆம் பிரிவு | கம்பனியின் பணிப்பாளர் சபை 09 பேருக்கு குறையாத 12 பேரை விஞ்சாத போதிலும், 2024 மே மாதம் வரையிலும் | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அமைப்பு அகவிதியின் 5(1) ஆம் பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் சபை நியமிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதன் உள்ளடக்கம் 06 ஆகும். | | |
| (ஆ) | அமைப்பு அகவிதியின் 11(1) ஆம் பிரிவு | கடந்த வருடத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டு, 15 மாதங்களை கடப்பதற்கு முன்னர் வருடாந்த பொதுக் கூட்டத்தை நடாத்தப்பட வேண்டிய போதிலும், இறுதிக் கூட்டம் நடாத்தப்பட்டு 20 மாதங்கள் கடந்துள்ள போதிலும், மீண்டும் பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அமைப்பு அகவிதியின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த பொதுக் கூட்டத்தை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அக்கடமியின் 2021/2022 நிதியாண்டுக்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான கணக்காய்வு அறிக்கைகள் மூலம் மொத்த சொத்துக்களை விஞ்சிய மொத்த பொறுப்புகள் ரூபா 8,642,380 ஆனமையால் தொடர்ச்சியான நிலவுகை தொடர்பான அச்சுறுத்தல் நிலவுவதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. அக்கடமியில் பேணிச் செல்லப்பட்டிருந்த பதிவேடுகளின் பிரகாரம் 2024 சனவரி 18 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த பொறுப்புகள் ரூபா 12,128,239 மற்றும் மொத்த சொத்துக்கள் ரூபா 3,268,316 ஆனமையால் மொத்த சொத்துக்களை விஞ்சிய மொத்த பொறுப்புகளின் அளவானது ரூபா 8,859,923 ஆகும். அதற்கமைய தொடர்ச்சியான நிலவுகை தொடர்பான அச்சுறுத்தல் மேலும் அதிகரித்திருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் தொடர்ச்சியான நிலவுகை தொடர்பான அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**3.4 நிறுவனத்தின் பணிப்பொறுப்பினை நிறைவேற்றுதல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அக்கடமியின் 2019 பெப்ரவரி மாதத்தின் பின்னர் மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிராததுடன், 2024 ஆம் ஆண்டு வரையிலும், எந்தவொரு மாணவரும் அக்கடமியில் காணப்படவில்லை. மேலும், எந்தவொரு செயற்பாட்டு நடவடிக்கையும் கம்பனியில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியை நிறுவியமைக்குரிய பணிப் பொறுப்பு நிறைவேற்றப்படாதிருப்பின் நிறுவனத்தை நடாத்திச் செல்லல் தொடர்பில் மீள கருத்திற் கொள்ள வேண்டும். |
| (ஆ) | 2017 ஆகஸ்ட் 16 ஆந் திகதிய 2032/23 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், உயர் கல்வியை மேம்படுத்தும் நோக்கத்திற்காக பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக இலங்கை நெனோ தொழில்நுட்ப நிறுவனம் அங்கீகரிக்கப்பட்டுள்ள போது அந்த நிறுவனத்தின் முழுமையான ஒத்துழைப்பின் அடிப்படையில் இலங்கையில் நெனோ மற்றும் உயர் தொழில்நுட்பம் தொடர்பான பட்டமளிப்பிற்காக 2017 ஒக்தோபர் 23 ஆந் திகதி ஸ்லின்டெக் அக்கடமி (பிணையால் வரையறுக்கப்பட்ட) எனும் பெயரில் தனியானதொரு நிறுவனமாக நிறுவப்பட்டிருந்தது. அக்கடமியால் ஆரம்பிக்கப்பட்டிருந்த இரு பட்டப் பாடநெறிகள் இலங்கை நெனோ | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தை நடாத்திச் செல்வதன் மூலம் ஆக்கபூர்வமான பெறுமதி சேர்தலொன்று இடம்பெறுவதில்லை என்பதால் நிறுவனத்தை தொடர்ந்து பேணல் தொடர்பில் கருத்திற் கொள்ள வேண்டும். |

தொழில்நுட்ப நிறுவனத்தின் மூலம் கையளிக்க முடியும் என்பதால் ஸ்லிம்டெக் அகடமியின் பெயரில் பட்டத்தினை கையளிப்பதற்கு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 19 மில்லியன் அரசின் மூலம் முதலீடு செய்யப்பட்டு தனியானதொரு நிறுவனம் நிறுவப்பட்டு பராமரிக்கப்படல் ஆக்கபூர்வமான செயல் அல்ல.